Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிற்பக் கலையில் பெண்ணியம்

**இரா.குமரகுருபரன்,**
**தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,**
**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,**
**சைதாப்பேட்டை, சென்னை 600015.**
**மின்னஞ்சல் : vinci.illustrator@gmail.com**

54

**ஆய்வுச் சுருக்கம்**

நுண்கலைகளில் மிகவும் அழகியல் தன்மை கொண்ட சிற்பக்கலையின் பயன்பாடு அறியப் படவேண்டும். தென்னிந்தியக் கோவில்களில் சிற்பக் கலையின் வழியாக சமூக பண்பாட்டு வரலாறு அறியலாம். நுண்கலைஞனின் தகுதி அனைத்தும் சார்ந்த அறிவாற்றல் திறன் கொண்டதாகவே பழங்காலம் அமைந்தது. மெய்ப்பாடும் சிற்பக்கலையும் , மேலைநாட்டுப் பழஞ்சிற்பங்கள் லிலித் தேவதையும் யமனும் ஒப்பீடு, அஃப்ரடைட் தேவதையின் அழகியல் வடிவம் ,புனித லாஸர் ஆட்டுன் கதீட்ரல் தேவாலயத்தில் உள்ள ஈவ் (ஏவாள்) பழஞ்சிற்பம்; அர்த்தநாரீஸ்வரர் என்ற உமையொருபாகன் புராணத் தத்துவம்; கொற்றவை என்ற தமிழ்ப்பெண் கடவுளின் சிறப்பு (கைலாசநாதர் கோயில் சிற்பம்) ; பெண்ணிய இலக்கணம் ஆண் பெண் சமத்துவம் கோரி நிற்பதே குறித்த மேற்கோள்.

**கடவுச் சொற்கள்**

***நுண்கலைஞன் தகுதிகள் - மெய்ப்பாடும் சிற்பமும் - கொற்றவை சிற்பச் சிறப்பு - அர்த்தநாரீஸ்வரர் சிற்பச் சிறப்பு***

**முன்னுரை**

1.1. இந்தியாவின் சிற்பக்கலை வரலாறு வழியாக அரசியல், சமூக வரலாறு அறிய இயலும். நுண்கலைகளில் மிகவும் அழகியல் தன்மை கொண்டது சிற்பக் கலையே. இலக்கியங்களுக்கு ஆதாரமாக அமைவதும் இக்கலையே.

1.2. இந்தியக் கட்டடக் கலை புராதனக் கோயில்களின் உருவாக்கத்திலிருந்து கிளைத்தது. குறிப்பாக, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் அமைந்த தென்னிந்தியக் கோயில்கள் இந்திய மரபின் செழுமையை உலகிற்கு உணர்த்திநிற்கின்றன.

1.3. எட்டாம் நூற்றாண்டில் உருவான சமூக அமைப்பு முறை வேறு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூகச் சூழல் வேறு. சோழர் காலத்தில்தான் கோவில் கலைகள் செழுமையடைந்தன. இருபதாம் நூற்றாண்டில் பேசப்படும் பெண்ணியச் சூழலை நுண்கலைகளில் குறிப்பாக, சிற்பங்களில் எதிர்பார்க்க இயலாது.

1.4. இருப்பினும், ஆதியில் வேட்டை சமூகத்தில் பெண்களுக்கு இருந்த முக்கியத்துவம் படிப்படியாக குறைந்து நிலவுடைமை சமூகத்தில் ஆணாதிக்க கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது.

1.5. கொற்றவை மட்டுமே தொன்மையான தமிழ்க் கடவுள் வரிசையில் வீரத்திற்காகப் போற்றப்பட்டாள். வட இந்திய மரபில் காளிக்கு நிகரான இடம் இது. வங்கத்தில் சக்தி வழிபாடு தந்த்ரா வகைமையில் சிறப்பான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

1.6. இந்தப் பின்னணியில்தான் பெண்ணியத்தை கோவில் சிற்பங்களில் அடையாளப் படுத்த வேண்டிய தேவை உள்ளது.

2. **நுண்கலைஞனின் தகுதி**

2.1. பேராசிரியர் சீனிவாசன், சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதி கூற்றை மேற்கோள் காட்டி எழுதுகிறார்:

- "ஒரு கலைஞன் பல்துறை அறிஞனாகத் திகழ வேண்டும் என்பது இலட்சியம் மட்டுமல்ல. அதற்கேற்ற பயிற்சி முறையும் பண்டைக் காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்குப் பண்டைக் கலைஞர்கள் நமது தமிழகத்தில் படைத்துள்ள கலைக் கட்டடங்களும் சிற்பச்செல்வங்களே போதிய சான்று பகிர்ந்து கொண்டிருக்கின்றன . இத்தகைய இலக்கணம் பொதுவாக எல்லாக் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் பொருந்தும். "

2.2. இதை மற்றொரு வகையிலும் விளக்கலாம். தமிழ் நாட்டில் உள்ள கோவில்களில் சைவ வைணவ சமண சமய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை தனிப்பட்ட உருவங்களாக மட்டுமல்லாமல் ஒரு சூழலை, ஒரு நிகழ்வை, ஒரு கதையைக் காட்டுவனவாகவும் உள்ளன. இந்தக் கதைகள் இதிகாசம், புராணம் முதலியவற்றில் இடம்பெற்றவை. இவற்றைச் செதுக்கும் சிற்பிகளுக்கு இதிகாச, புராணக் கதைகள் நன்கு தெரிந்திருந்தால் மட்டுமே அவர்களால் இத்தகைய சிற்பங்களை உருவாக்க முடிந்தது. "

(பக். 140, இலக்கிய வரலாற்று வரைவியல்)

3. **மெய்ப்பாடு**

3.1. நாட்டிய சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள இசை முத்திரைகள், கரணங்கள், தாளங்கள், அடவுகள், மெய்ப்பாடு முதலியவை சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலான கலைகளில் வல்லவர்களும் அறிந்தவை.

3.2. சிற்பக் கலையில் மெய்ப்பாடு அடிப்படையானது. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிற்பங்கள் (படிமங்கள், புடைப்புச் சிற்பங்கள்) ஏதாவதொரு பாவத்தைக் காட்டுவதாகவும் நடன நூலில் கூறப்பட்டுள்ள ஒரு நிலையில் நிற்பதாகவோ, இயங்குவதாகவோ படைக்கப்பட்டுள்ளன. கைகள் வரம் தருதல், அருளல், கருவிகள், மலர், சாமரம் முதலியவற்றை ஏந்துதல் போன்ற பாவங்களில்தான் செய்யப்பட்டுள்ளன.

3.3. சிற்பிகளுக்கு நாட்டியக்காரர்கள் நடனக் காட்சிகளைக் காட்டி அதைப் பார்த்து சிற்பங்கள் உருவாக்கப்படவில்லை. சிற்பிகள் சிற்பக்கலையைக் கற்கும்போதே நாட்டிய முத்திரைகளையும் சேர்த்தே கற்றனர்.


3.4. தமிழ்க் கவிதைக் கலைக்கும் சிற்பக் கட்டடக் கலைகளுக்கும் உள்ள அழகியல் தொடர்பைச் சிவத்தம்பி ஒப்புமைப்படுத்தி விளக்கியுள்ளார்.

3.5. சிதம்பரம் நடராசர் கோவிலில் நான்கு கோபுர நிலைக்கால்களிலும் 108 கரணங்களை பெண்கள் ஆடுவதாகச் சோழர் காலத்தில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. "

என்று குறிப்பிடுவது அக்காலத்தில் நிலவிய கல்விமுறையை உணர்த்துகிறது.

4. **மேலைநாட்டு பழங்கால சிற்பக் கலை**

4.1. மேலைநாட்டுச் சிற்பக்கலையின் உன்னதத்தை உரோமாபுரி, இத்தாலி புளாரன்டைன், கிரேக்கம், மெஸபடோமியச் சிற்பங்கள் வழி அறியலாம். இலியத், ஒதிஸி ஆகிய மாபெரும் இதிகாச இலக்கியங்கள் சுவையான புராணக் கதைகளைத் தாங்கி நிற்பன. இவற்றிற்கு முப்பரிமாணக் காட்சி வடிவம் வழங்கி சிற்பம், ஓவியம் முதலான நுண்கலைகளை வளர்த்தெடுத்த பெருமை, மறுமலர்ச்சி காலத்திற்கு உண்டு.



"மெசபடோமியாவிலுள்ள லிலித் மரண தேவதை (பொது ஆண்டு 2000-1800) நிற்கும் கருப்பு சிவப்பு சுடுமண் சிற்பம்; உர் வம்சம் மருவிய காலத்திற்கும் ஹமுரபி பட்டத்திற்கு வருவதற்கு முன் இடைப்பட்ட இர்சின்-லார்சா காலத்திற்கும் நடுவில் உருவானது.

லிலித் இரு கரங்களிலும் மனிதர்களின் வாழ்நாள் காலத்தை முடிக்கும் பாசக்கயிற்றுடன் காணப்படுகிறாள். அவள் காலடியில் காணப்படும் சிங்கம் மற்றும் ஆந்தை உருவிலும் சில சமயம் வெளிப்படுவாளாம்."

( பக். 29, 'Western Asian Art', Piper David)

4.2. இந்து புராண மரணக் கடவுளான யமனுக்கு நிகரான வலிமை கொண்டவள் லிலித் தேவதை; பாசக்கயிறும், நிற்கும் பாணியும் இந்து பௌராணிக கதைமரபையும், சிற்பக் கலையையும் சார்ந்த சாயலில் வெளிப்படுகிறது. காதல், அன்பு போன்ற மென்மைப் பண்புகள் கொண்டதாக இந்து சமயப் பெண் கடவுளர்கள் சித்திரிக்கப் படுகையில், மரணதேவதையைப் பெண் கடவுளாக சித்திரிக்கின்றது மெஸபடோமியச் சிற்பக் கலை.

5. **பெண்ணியச் சிற்பங்களின் நளினம்**

மத்திய தரைக்கடல்

ஆசியா மைனர் மிரீனாவிலுள்ள ( பொது ஆண்டுக்கு முன் - 100 ஐ ஒட்டியது) ***ஊர்வம்பு பேசும்***

***இரு பெண்மணிகள்*** (Two Women Gossiping, Myrina ) சுடுமண் சிற்பம்.

முதிய பெண்மணி புதுமணப் பெண்ணுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது. மணப்படுக்கை செம்மை நிறத்திலும் ஆடை மடிப்புகள் நீலத்திலும், பெண்களின் உடல் பகுதிகள் குங்கும வண்ணத்திலும் திகழ்கின்றன.

பெண்களின் மனநிலை மெய்ப்பாடுகளை மையமிட்ட எண்ணற்ற இத்தகைய சிற்பத்தொகுதிகள், தொடக்கத்தில் கிரீஸ் தனக்ரா பகுதி பாணியாகக் கருதப் பட்டது; பிற்பாடு தனக்கெனத் தனித்துவப் பாணியாகவே தகுதி பெற்றது. ரொகோகோ பானைவகை கைவினைச் சிற்பங்களுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது.



( pp. 43, 'Hellenistic Art', Piper David)

***கூந்தலைப் பிழியும் அஃப்ரடைட் தேவதை*** பொது ஆண்டு 350-ஐ ஒட்டிய சிற்பம்: சிற்பி **ஏப்பலஸ் (Apelles)**

இப்போதைய ரெம்ப்ரான்(ட்) ஓவியங்களின் மதிப்பை விடக் கூடுதலானது இதன் மதிப்பு!

( pp. 44, 'The Lost Riches of Classical Painting,' Piper David)

5.1. உள் முன்னட்டை முகப்பில் தமது நூலுக்கு இப்படத்தையே தேர்வு செய்கிறார் டேவிட் பைப்பர்.

5.2. கிரேக்கக் காதல் தேவதையான அஃப்ரடைட், உரோமானிய காதல் கடவுளான வீனஸுக்கு இணையானவள்; இந்து புராணத்தில் ரதிக்கு நிகரானவள்.



5.3. இதுபோன்றே இயேசு கிறிஸ்து குறித்த விவிலியக் கதைகளே இடைக்காலம் வரை ஓவியங்களிலும் சிற்பங்களிலும் காட்சிப் படுத்தப் பட்டன. மிக்கேல் ஆஞ்சலோவின் 'பையட்டா' மடோனா சிற்பம் புகழ் வாய்ந்தது; கூடவே அநாகரீகமான மக்களின் தாக்குதல்களுக்கும் ஆளானது. மடியில் கிடத்திய இயேசுவின் உடலை ஆதாரத்துடன் தாங்கி நிற்கும் கன்னிமேரியின் கருணை கொண்ட உடல் மொழியும் ஆடைகளின் செய்ந்நேர்த்தி அழகியலும் எக்காலத்திலும் பேசத் தக்கன.

5.4. ஜான் மில்டன் எழுதிய "பேரடைஸ் லாஸ்ட்" (Paradise Lost) என்ற ஆங்கில நெடுங்கவிதை நூல் ஈடன் தோட்டத்தில் ஆதாம்-ஏவாள் விவிலியக் கதையுடன் தொடங்குகிறது. இதிலுள்ள 12 தொகுதிகளில் புத்தகம் ஒன்பது குறிப்பிடத் தக்கது. சாத்தானை கடவுளுக்கு நிகரான வலிமை படைத்தவனாக மாற்றிக் காட்டுகிறார் மில்டன். இதைக் காட்சிப்படுத்தலில் மறுமலர்ச்சி கால ஓவியங்கள் ஏராளம் கிடைக்கின்றன. ஆனால் சிற்பங்களாக் கிடைப்பவை ஒரு சில மட்டுமே.



- புனித லாஸர் ஆட்டுன் கதீட்ரல் தேவாலயத்தில் உள்ள பழஞ்சிற்பம் **ஈவ் (ஏவாள்)** (பொது ஆண்டு 1135) இடிபாடுகளிலிருந்து தப்பித்ததற்குக் காரணம் கூரை உத்தரத்திலமைந்த சிற்பமாக இது நிலைபெற்றதுதான். ஏவாள் ஆதாமிடம் ரகசியமாகத் தூண்டும் உணர்வு வெளிப்படுவதைக் காட்டும் உடல்மொழியும் ஏவாளின் நிர்வாணம் மரத்தழையால் மறைக்கப்பட்டபடி வெளிப்படுவதும் **சிற்பி ஜிஸ்லெபர்டஸ்** படைப்பாற்றலை அதிநுட்பமாக வெளிப்படுத்துகிறது.

  ( pp. 72, 'Gislebertus: 'The Sculpture at Autun', Piper David)

6. **அர்த்தநாரீஸ்வரர் என்ற உமையொருபாகன்**

6.1. அர்த்தநாரீஸ்வரர் படைப்பு ஆண்-பெண் சமத்துவத்தை உணர்த்தும் கதை. சிற்பக் கலையில் சிதம்பரம் நடராசர் கூத்து வடிவச் சிற்பத்திற்கு இணையான கவனிப்பைப் பெற்றுத் திகழ்கிறது.

6.2. பெங்குயின் புக்ஸ ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள நூலில் ரோஷன் தலால் அர்த்தநாரீஸ்வரர் குறித்து எழுதியது பின்வருமாறு:

(தமிழாக்கம்: கட்டுரையாளர் )

"இந்தியப் பண்பாட்டு மரபில் பிரதியாகவும் படிமங்களாகவும் முதலாவது நூற்றாண்டு முதல் அர்த்தநாரீஸ்வரர் தொன்மம் இடம் பெறுகிறது. வலப்பாதி ஆணாகவும் இடப்பாதி பெண்ணாகவும் காட்சியளிக்கும் இது குறித்து பல புராணக் கதைகள் புழக்கத்தில் உருவாக்கம் பெற்றன. அதில் ஒன்று பிருங்கி முனிவர் கதை.

கயிலாயத்தில் சிவனையும் பார்வதியையும் தேவர்களும் முனிவர்களும் வழிபடுவது வழக்கம். ஆனால் பிருங்கி முனிவர் பார்வதியை வழிபட மறுக்கிறார். சிவனை மட்டுமே வலம் வருவதாக உரைக்கிறார். எனவே, சிவன் தனது உடலை, பார்வதி உடலுடன் இணைக்கிறார். இருவரும் ஒன்றியபடி காட்சியளிக்கவே பிருங்கி முனிவரும் வண்டு உருமாறி சிவனின் உடலைத்

துளைத்து சிவனையே வலம் வந்தாராம்.

இத்தகைய கதை தாண்டி, பிற்காலத்தில் சிவன், சக்தி வழிபாட்டுக் குழுக்கள் (Shiva Parvati Cults) உருவாகி, தெய்வீகக் கலவி என்பதாக உணர்த்தின.

சிவன் கோவில்களில் அர்த்தநாரீஸ்வரர் உருவச் சிற்பங்களைக் காணலாம். சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நந்தி மீது அமர்ந்திருக்கும் அர்த்தநாரீஸ்வரர் காட்சியளிக்கிறார்.

வலது பாதி சிவனின் இருகரங்களில் ஒன்று வரத முத்திரையுடனும் ( வரம் அருளுவது) , மற்றொன்று திரிசூலத்துடனும் விளங்குகின்றன. இடது பாதி பார்வதி கரம் மலரேந்தி நிற்கிறது.


அர்த்தநாரீஸ்வரருக்கென்றே பல கோவில்கள் உள்ளன; இமாச்சலத்தில் மண்டி என்ற இடத்திலமைந்த கோவில் அழகிய வேலைப்பாடு மிக்கது"

(Dalal Roshen, Hinduism: An Alphabetical Guide, Penguin Books,)

7. **ஆண்கடவுளுக்கு நிகரான பெண் கடவுள் கொற்றவை**

- "சிற்பங்களிலும் புராணங்களிலும் வாகனங்கள் என்று குறிப்பிடுமிடத்து சிவன், பிரம்மா, விஷ்ணு, கொற்றவை, இந்திரன் போன்ற முக்கிய தெய்வங்களுடன் மட்டுமே தொடர்புபடுத்தப் படுகின்றன. பார்வதி, சரஸ்வதி, லட்சுமி ஆகியவர்களுக்குத் தனியாக வாகனம் இல்லை என்பதையும் எண்ணிப் பார்த்தல் அவசியம்."

(பக். 180, தமிழகச் சிற்பங்களில் பெண் தொன்மம்)



7.1. இவ்வகையில் கைலாசநாதர் கோயிலில் நிற்கும் கொற்றவை சிலை, ஆண் கடவுளர்களுக்கு நிகரான கம்பீரத்துடன் காட்சிப்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கது.

- *மகிடாசுரமர்த்தினி தொன்மம்:*

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் இருக்கும் மகிடாசுரமர்த்தினி உருவத்தில் ஒரு கிளியின் உருவம் உள்ளது. இதைப் பற்றி ( கலை விமர்சகர் ) *இந்திரன்* கூறுவது கவனிக்கத்தக்கது.

- "கிளியைக் கையில் தொத்தவைக்கக் காரணம் என்ன? சிற்பி, நாட்டிய மகளிருக்கென இருக்கும் பெண் தன்மையின் எழிலை உலோகத்தில் காட்டமுடிவது போல் நீட்சி, திரட்சி, ஒடிவு, வளைவு ஆகியவற்றை கல்லில் அழகுறக் கொண்டு வந்திருக்கிறார். ஆனால் இடக்கால் சிம்மத்தின் மீது உயர்த்தி வைத்து ஆயுதங்களுடன் செம்மாந்து

நிற்கும் பெண் தெய்வத்திற்குள் இரகசியமாக வார்த்தைகளால் விளக்க முடியாத ஓர் ஆண் தன்மை வந்து அமைந்து விடுகிறது.. இங்கு சிற்பி 'ரூபம்' (உருவம்) என்பதைக் கொண்டு வருவது மட்டுமல்லாது 'ஸ்வரூபம்' (உள்ளிருக்கும் உண்மை உருவம்) என்பதையும் கொண்டு வர முயற்சிக்கிறார். இதற்காக அவர் கிளியை, ஒரு தொனிப் பொருளைக் கொண்டு வரும், குறியீடாகப் பயன்படுத்தி இருக்கிறார்.

செம்மாந்து காலைத் தூக்கி வைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்ப்பது ஆணினது பண்பு. அதாவது கீழ் நோக்கிய பார்வையோடு இல்லாதது. துர்க்கையின் வடிவு அவ்வாறாக இருப்பதால் ஆண் பண்பு காட்சியில் தெரிகிறது என்றெண்ணி பெண் என்ற உண்மையான (உள்ளிருக்கும் வடிவம்) பண்பைக் கொடுக்க கிளி கொடுக்கப் பட்டிருக்கலாம் என்பதை அவர் கருத்தில் இருந்து அறிய முடிகிறது.

கிளி என்பது சிருங்காரத்தின் குறியீடே. மீனாட்சி, ஆண்டாள், காமாட்சி, ரதி போன்றோருடன் கிளி இருப்பதைச் சிற்பங்கள் சித்திரிக்கின்றன. ஆணுடன் கிளி இல்லை.ஆனால் மன்மதனின் வாகனம் கிளி என்று இந்து மரபில் கருதப் படுகிறது. மன்மதனைக் காதலின் கடவுள், மோக உணர்வைத் தூண்டக்கூடியவன் . என்று கருதுவதும் நோக்குதற்குரியது. எனவே நிமிர்ந்து நின்று ஆண் தன்மையைப் பெற்றுள்ள துர்க்கையைப் பெண் தன்மைக்குக் கொண்டுவர கிளி காட்டப் பட்டுள்ளது என்றால் பெண்ணுக்குச் செம்மாந்து நிமிர்ந்து நின்று காலைத் தூக்கிவைத்துக் கொள்ளும் உரிமை கிடையாது என்பதும், அவள் காம உணர்வுகளைத் தூண்டும் பாவத்தோடும் (சிருங்காரம்) அதனுடன் கூடிய நாணத்தோடும் மெலிவு வளைவுகளோடும்தான் காணப் படவேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. கைலாசநாதர் கோயிலிலுள்ள ஒவ்வொரு சிற்பத்தையும் காணும்பொழுது ஆணுடன் இருக்கும் பெண் ஆணின் பக்கத்தில் இருந்தாலும் கூட நேராக நிற்கும் பண்பே இல்லை. அமர்ந்திருக்கும் போதும் நேராக நில்லாமல் சற்று ஒடுங்கியும் திரும்பியும் அமர்ந்தவாறே சித்திரிக்கப்படுகின்றனர். நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் பெண்ணுக்கு இருக்கக்கூடாது என்ற கருத்து சிற்பங்களில் வெளிப்படுகிறது. ஆனால் பெண் நிமிர்ந்து நிற்கும் நிலை புறனடையாக அரிதாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. அது பெண் ஆணுடன் இருக்கும் போதல்லாமல் தனியாக நிற்கும் போதும் அமரும் போதுமாகும்.

(பக்.195-196, முனைவர் பெ. .நிர்மலா)

என்று கருத்துக் கூறுகிறார்.

7.2. தனது நூல் முகப்பிற்கும் இப்படத்தையே காட்சிப்படுத்துகிறார் பேராசிரியர் பெண்.நிர்மலா.

8. **பெண்ணியம் வரையறை**

பேராசிரியர் பிரேமா எழுதிய "பெண்ணியம் அகலமும் ஆழமும்" நூலின் அணிந்துரையில் பேராசிரியர் தேவதத்தா மேற்கண்டவாறு கூறுவது தமிழ்நாட்டுச் சிற்பக்கலைக்கும் பொருந்தும்..

- பெண்ணியம் என்பது பெண் விடுதலைக்கான போராட்டம்தான். அதாவது பெண்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

ஆணைப்போலவே சுதந்திரமானவள்; அவனுக்கு நிகரானவள்; அனைத்து நிலைகளிலும் சமத்துவமானவள்; எந்த நிலையிலும் ஆற்றலில் அவள் குறைந்தவள் இல்லை. தனக்கான இந்த உரிமையை மீட்டெடுப்பதற்கே அவள் போராடுகிறாள். அந்தப் போராட்டத்தில் அவள் ஆணுக்கு எதிரியில்லை; அவனுடைய மேலாதிக்கத்திற்கும், அதிகாரத்திற்கும்தான் எதிரி. போராட்டத்தில் அவனையும் இணைத்துக் கொள்ளவே விரும்புகிறாள். தடையாய் நின்றாலோ அவனையும் வென்று இருவருக்குமான விடுதலையைப் பெறவே போராடுகிறாள்.

( IX. தோழமையுடன் ஒரு பகிர்தல், தேவதத்தா, பெண்ணியம் அகலமும் ஆழமும்)

## 9. நிறைவுரை

- இந்தியப் பெண்ணியம் மேனாட்டுப் பெண்ணியத்துடன் மாறுபட்டதாகவும் இணைவதாகவும் உள்ளது.
- சிற்பங்களில் பெண்ணியம் என்பது இன்னும் முழுதுமாகக் கைகூடவில்லை.
- ஓவியங்களிலும் கைவினைக் கலைகளிலும் கவனம் செலுத்தும் மகளிரில் சிற்பக் கலைஞர்களானோர் மிகவும் குறைவு.
- குறைந்தபட்சமாக நுண்கலை ஆய்வுகளிலாவது மகளிர் ஈடுபடுவதன் வழியாகவே பெண்ணியமும் சிற்பக் கலையும் புத்துயிர் பெறும்.

**துணைநூற்பட்டியல்**

1. சீனிவாசன், இரா, இலக்கிய வரலாற்று வரைவியல், பரிசல் வெளியீடு, பரிசல் புத்தக நிலையம், 235, P பிளாக், எம்எம்டிஏ காலனி, அரும்பாக்கம், சென்னை - 600 106, முதல் பதிப்பு :டிசம்பர் 2022,
2. பிரேமா, இரா. பேராசிரியர்,பெண்ணியம் அகலமும் ஆழமும், காவ்யா வெளியீடு, காவ்யா, 16 இரண்டாம் குறுக்குத் தெரு டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, முதல் பதிப்பு: 2015.
3. நிர்மலா பெ. முனைவர், தமிழகச் சிற்பங்களில் பெண் தொன்மம், அலைகள் வெளியீட்டகம், 97/55, என்.எஸ்.கிருஷ்ணன் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024, முதல் பதிப்பு: 2012.
4. Dalal Roshan, Hinduism: An Alphabetical Guide, Penguin Books, Penguin Random House India Private Limited, 2014.
5. Piper David, The Illustrated History of Art, Crescent Books, New Jersey USA, 1995.